Thalaivaasal

# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 119 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | பெப்ரவரி 08, 2021

தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news

## பேரணியில் பங்கேற்றவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு மன்றில் வழக்குத் தாக்கல்!



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தினை முன்னெடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுத்த பிரமுகர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முல்லைத்தீவு மாவட்டப் பிரதேச பொலிஸ் நிலையங்களினால் ட அறிக்கையின் அடிப்படையில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், 03

## ஐ.நா. மனித உரிமை பேரவையில் மீண்டும் இணையவுள்ள அமெரிக்கா!



உலகெங்கும் இடம்பெறும் அநீதி மற்றும் கொடுங்கோன்மைக்கு எதிராக போராடுவதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையில் மீண்டும் இணையவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடனின் இந்தத் தீர்மானம் குறித்த அறிவிப்பை அமெரிக்கா வெளியுறவுச் செயலாளர் வெளியிடவுள்ளதாக வெளியுறவுத்துறை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து 2018-ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து 03

## கட்சித் தலைவர்களுக்கு அவசர அழைப்பு விடுத்த மஹிந்த!

கட்சித் தலைவர்களுடனான அவசர கூட்டத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்க்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.


இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் நாடாளுமன்ற கட்டட தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம் பெறவுள்ளது.

இந்நிலையில் இந்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ச 10 அரசியற் கட்சி தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே பிரதமர் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கள ஆட்சியாளர்கள் காரியம் முடியும் வரையில் காலைப் பிடிப்பார்கள் அதன் பின் கழுத்தைப் பிடிப்பார்கள்



### இந்தியா இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் விக்கி

நான் எனது உரைகளில் தொடர்ச்சியாக கூறி வந்ததே இன்றைக்கு இந்தியாவுக்கு நடந்துள்ளது. அன்று தொட்டு இன்று வரை இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் இந்தியாவை ஏமாற்றியே வந்துள்ளன. அதன் தொடர்ச்சியே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்தில் நடந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 03

## 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மார்ச் 01 முதல் தடுப்பூசி




இலங்கையில் 30 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதையுடைய பொதுமக்களுக்குத் தடுப்பூசி போடும் பணிகள் மார்ச் 1 முதல் ஆரம்பமாகும் என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள், கோவிட்19 கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாடு முழுவதும் 4,000 தடுப்பூசி மையங்களில் இந்த தடுப்பூசி போடும் பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 03

## நெருக்கடிகள் ஏற்பட்டாலும் ஜெனிவாவில் சுயாதீனத்தை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்கிறார் மகிந்த



ஜெனிவாவில் எவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டாலும் நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என பிரதமர் மகிந்த ராஜபக்சே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போரை வெற்றிகொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது. 03

## தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 900 ரூபாயை வழங்க தீர்மானம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 900 ரூபாயையும் பாதீட்டுக் கொடுப்பனவாக 100 ரூபாயையும் சேர்த்து 1,000 ரூபாயை சம்பளமாக வழங்குவதற்கு, சம்பள நிர்ணயச் சபை தீர்மானித்துள்ளது. 03



# மட்டக்களப்பு காரமுனையில் சிங்கள குடியேற்ற முயற்சி! அதிகாரிகள் துணை போக வேண்டாம் – சீ.யோகேஸ்வரன்

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காரமுனை பிரதேசத்தில் 178 சிங்கள குடும்பங்களை குடியேற்ற முயற்சி எனவே மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் உண்மையாக இங்கு குடியிருக்காத சிங்கள மக்களுக்கு உங்கள் பதவியை பாதுகாக்க வேண்டும்.

என்பதற்காக பிழையான விடயத்துக்கு துணை போகவேண்டாம். மீறுச் செயற்பட்டால் மக்கள் உங்களுக்கு எதிராக கவனயீர்பு போராட்டத்தை நடாத்துவார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்

மட்டக்களப்பு பஸார் வீதியிலுள்ள கிழக்கு ஊடாக மன்றத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவத் இவ்வாறு தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காரமுனை என்கின்ற மாங்கேணி கிராம அதிகாரிக்குட்பட்ட தெற்கு பிரதேசத்தில் 178 சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த மக்களை குடியேற்றுவதற்கான செயற்திட்டம் கடந்த 2011ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது

குறிப்பாக அந்த பகுதியில் குடியிருந்த சிங்கள மக்கள் குடியிருந்து 1985 ஆம் ஆண்டு யுத்த சூழல் காரணமாக் இடம் பெயர்ந்ததாக காரணம் காட்டுகின்றனர்.

அந்த 178 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல இங்கு இருக்கவில்லை என்பதற்கு பல ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றது.

இந்த செயற்திட்டம் 2011 ஆரம்பிக்கப் பட்ட போது இது தொடர்பாக நான் காணி அமைச்சருடன் பேசி அதனைதடுத்து நிறுத்தியிருக்கின்றேன்.

திம்புலாகல தேரரால் முன்னெடுக்கப் பட்டு வந்த இந்த திட்டம் 2015 ஒஸ்ரின் பெனாண்டோ கிழக்கு மாகாண ஆளுநராக இருக்கும் போது ,

காணி உதவி ஆணையாளர் இருந்த சிங்கள பெண் 178 பேருடைய ஆவணத்துடன் தேரர் சென்றபோது அதனை அவர் பாரத்துவிட்டு பொயயான ஆவணங்கள் என அதனை நிராகரித்தார்.

இந்த நிலையில் அவர்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்த போது அப்போது திருமதி சாள்ஸ் அரசாங்க அதிபராக இருந்த பேது இந்த பிரச்சனை பூதாகரமானது.

அப்போது காணி ஆணையாளர் அனுமதிப்பத்திரம் வழங்கவேண்டும் என நாவலடியிலுள்ள கேணிநகர் கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் நடாத்த திட்மிடப்பட்டது.

இதனை அறிந்த நான் காணி அமைச்சரிடம் தெரிவித்து அதனை தடுத்து நிறுத்தினேன். ஆனால் அந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந் 178 பேருக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது

இந்த 178 குடும்பங்களும் குடியேறி 1985 வெளியேறியிருந்தால் அவர்கள் 1981ம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இருக்க வேண்டும்.

அவ்வாறு இருந்தால் அதனை கொடுப்பது நியாயமானது சிங்கள மக்கள் இருந்த இடத்தில் அதை கொடுப்பதற்கு தடையில்லை ஆனால் பிழையான முறையில் குடியேற்றுவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

அப்போது உதவி அரசாங்க அதிபராக இருந்த வாகரை பிரதேசம் மாவட்ட செயலகம் கச்சோரி இவற்றில் அவர்கள் இருந்ததற்கான ஆதாரம் இருக்கும்.

இலங்கையில் காணிச்சட்டம் ஒன்றுதான் அதில் சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம் தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என்ற இருக்கின்றதா? ஆகவே இது கூட பிழையான நடைமுறை காணி அனுமதிப் பத்திரமும் மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்டதாக கூறுகின்றனர்.

அந்த அனுமதிப்பத்திரம் சிங்களத்தில் இருக்கின்றது அவ்வாறான ஒரு அனுமதிப் பத்திரம் இதுவரை மாவட்ட செயலகத்தில் வழங்கப்படவில்லை



வழங்கப்படாமல் புதிதாக தயாரிக் கப்பட்டுள்ளது இதில் கையொப்பமிட்ட காணி உத்தியோகத்தர் மட்டக்களப்பில் கடமையாற்றியவருமில்லை, மாவட்டத்தைச் சோர்ந்தவருமில்லை, அவர் அம்பாறையைச் சேர்ந்த உத்தியோகத்தர்.

அவர் எவ்வாறு இங்கு கடமை மேற்கொள்ளமுடியும் ஆகவே இது முழுக்கமுழுக்க பொய்யான சட்டவிரோத மான நடவடிக்கை

இந்த காணி அனுமதிப்பத்திரம் யார் தயாரித்தாரே அவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும்.

எல்லாம் போலியானவை திட்டமிட்ட வகையில் குடியேற்ற போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது இதற்கு சில தமிழ் அதிகாரிகள் துணைபோயிருக்கின்றனர்.

இது தொடர்பாக கடந்த வாரம் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலே 178 குடும்பங்களையும் அழைத்து அவர்களுடைய ஆவணங்களை பரீசீலிக்கும் நடவடிக்கை நடைபெற்றது.

அங்கு நான் சென்று மத்திய காணி ஆணையாளரிடமும் அரசாங்க அதிபரிடமும் கடிதம் ஒப்படைத்தேன்.

இந்த பொய்யானமுறையில் சிங்கள மக்களை குடியேற்றி மட்டக்களப்பில் சிங்கள மக்கள் குடிசன தொகையை அதிகரிப்பதற்கும் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கும் இந்த போலி செயற்பாட்டை நிறுத்திவைக்க நீதிமன்றத்தை நாட இருக்கின்றேன்.

அதேவேளை அம்பாறை பொத்துவில் கனகர் கிராமத்தில் நீண்டகாலமாக மக்கள் வாழ்ந்து யுத்தத்தால் வெளியேறிய சுமார் 300 குடும்பங்களை இன்றுவரை குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

அந்த மக்கள் மிக கஷடப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் அப்படியிருக்க சிங்கள மக்களுக்கு திட்டமிட்டு பொய்யான ஆவணங்களை தயாரித்து காணியிருக்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அத்துமீறிய திட்டமிட்ட சிங்கள குயேற்ற இருப்பதை வன்மையாக கண்டிக்கின்றேன்.

இவ்வாறு கெவிலியாமடுவில் ஆயிரக்கனக்கான ஏக்கர் காணியை ஊர்காவல்படையினரை வைத்து பயிர்ச் செய்கை என்ற பேர்வையில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறு மயிலத்தனைமடு மேச்சல்தரையும் சிங்கள மக்களை குடியேற்ற திட்டம்.

புனானையில் பௌத்த மத்திய நிலையம் அமைக்க வேண்டும் என திம்புலாகல தேரர் 50 ஏக்கர் காணி வாகரை பிரதேச செயலாளரிடம் கோரிக் கொண்டிருக்கின்றார்.

இவற்றுக்கு எல்லாம் காரணம் மட்டக்களப்பு வனபரிபாலனசபை ஒரு சிறு துண்டை தமிழ் மக்கள் பிடித்தால் உடனடியாக சட்டத்தை நாடுகின்றனர்.

ஆனால் காரமுனையில் இந்த 178 குடும்பங்குளக்கும் காணிவழங்க இங்கு இருக்கின்ற சிங்கள அதிகாரி பூரண ஆதரவை வழங்கியுள்ளார்

எனவே திட்டமிட்டு சிங்களக் குடியேற்றத்தை ஏற்றுவதற்கு சிங்கள அதிகாரிகள் செயற்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாத இந்த நாடு ஒன்றாக இருந்தால் நீதி ஒன்றாக இருந்தால் இவ்வாறான செயற்பாடுகள் நடாத்தப் படமுடியாது

## புலம்பெயர்ந்த தமிழர்களுக்காக எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது!– அமைச்சர் ஆவேசம்



இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபை முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளதாகவும்,

இதுபோன்ற சம்பவங்கள் இலங்கையில் நடக்கவில்லை என்பதை இங்கிலாந்து உள்துறை அமைச்சகத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாகவும் ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கலகெதர பிரதேச சபையின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிக்கட்ட போரில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக உள்ளக விசாரணையில் கண்டறியப்பட்டால், நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது என்றும்,

தமிழ் புலம்பெயர்ந்தோரின் நலன்களுக்காக பாரபட்சமற்ற குற்றச்சாட்டுகளை ஏற்கத் தயாராக இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசாங்கம் யாரையும் காட்டிக் கொடுக்கவோ பாதுகாக்கவோ விரும்பவில்லை என்றும், அப்போது என்ன நடந்தது என்பது பற்றிய உண்மை, தமிழ் புலம்பெயர்ந்தோ அல்லது யு.என்.எச்.ஆர்.சி.க்கு தெரியாது என்றும் கூறினார்.

30 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மனிதாபிமான நடவடிக்கையின் போது ஏதேனும் நடந்திருக்கிறதா என்று கண்டுபிடிக்க இலங்கை அரசாங்கம் உள்ளக விசாரணையை நடத்தத் தயாராகி வருவதாக ரம்புக்வெல தெரிவித்தார்.

2018 ல் வெளியுறவு அமைச்சராக பணியாற்றிய திலக் மாரப்பன, தனது சொந்த அரசின் அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புக் கொண்ட 30ஃ1 தீர்மானத்தை நிராகரித்து, இலங்கை அரசியலமைப்பின் படி அதை அங்கீகரிக்க முடியாது என்று அறிவித்தார்.

தற்போதைய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன குற்றச்சாட்டுகளை மறுப்பதைத் தாண்டி இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகுவதாக அறிவித்தார்.

லிபியா மற்றும் சிரியாவுக்கு அமெரிக்கா என்ன செய்திருக்கிறது என்பதை உலகம் கண்டதாகவும், கொலைகளில் சம்பந்தப்பட்ட அந்த நாடுகள் குறித்து எந்த விசாரணையும் இல்லை என்றும் ரம்புக்வெல குறிப்பிட்டார்.

## எரியும் தீயில் எண்ணையை ஊற்றுவதுபோல வடக்கு, கிழக்கில் போராட்டம்

புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டே, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்கள் குறித்து தொலைக்காட்சி நிகழ்வொன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கடந்த சில நாட்களாக நடைபெற்ற இவ்வாறான போராட்டங்கள் ஒரு சில தரப்பினரின் குறுகிய நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டு என்றும் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணையை வார்ப்பதுபோல இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.



இதேநேரம் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் ஏற்கத்தக்கவை என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனா தொற்றின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையில் நேற்று ஆயிரத்து 625 சுகாதார பிரிவினருக்கு தடுப்பூசி

இலங்கையில் நேற்றைய தினம் மேலும் ஆயிரத்து 625 சுகாதார பிரிவினருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 773 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கையில் கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மத்தளை விமான நிலையத்திற்கு 2500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை

2021ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மத்தளை சர்வதேச விமான நிலையத்திற்கு 2500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத் துறையின் மீட்புத் திட்டத்தின் பேரில் கசகஸ்தானின் அஸ்தானா விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், 160 சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வந்ததன் பிரதிபலனாகவே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் சுற்றுலாத்துறை முகவர் நிறுவனமான எயிட்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்தினர் இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரை கசகஸ்தானிலிருந்து 350 சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வருவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

கசகஸ்தானின் தேசிய விமான சேவையான அஸ்தானா விமான சேவைக்கு மேலதிகமாக ஸ்கெட் விமான சேவையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை மத்தளை சர்வதேச விமான நிலையத்திற்கு தனது சேவைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சிங்கள ஆட்சியாளர்கள்...

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதில்லை என்ற அமைச்சரவையின் முடிவு குறித்து கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ஜெனீவா மனித உரிமைகள் சபை கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னரே இது நடைபெறும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது சற்று முன்னதாகவே நடந்துவிட்டது.

யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை இலங்கை

அரசாங்கம் சீன நிறுவனமொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்க வழங்க இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது மிகவும் பாரதூரமான ஒரு விடயம்.

இனியாவது இலங்கைத் தீவில் நிரந்தர நம்பிக்கைக்குரிய தரப்பாக இந்தியா தமிழ் மக்களைக் கருதி அவர்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் அவர்களின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை மையப்படுத்தி தனது கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

இந்தியாவின் தென்கோடி பாதுகாப்பாக இருக்கவேண்டுமானால் வடக்கு -கிழக்கில் தமிழ் மக்கள் உச்சளவு அதிகாரப் பகிர்வுடன் ஆட்சி செய்யவேண்டும்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றினை தமிழ் மக்களே தெரிவுசெய்யும் வகையில்,

சர்வதேச சமூகத்தினால் வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கையை இந்தியா தலைமை ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

கிழக்கு முனை விடயத்தில் நடந்ததே நாளை 13ஆவது அரசியல் திருத்த விடயத்திலும் நடக்கும். ஒற்றை ஆட்சியின் கீழான எந்தத் தீர்வுக்கும் இந்த நிலைமையே ஏற்படும் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்.

1987ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது இந்திய மாநிலங்களுக்கு வழங்கும் அதே உரிமைகளை இலங்கையின் மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என்றே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

ஆனால் ஜே.ஆர் அவற்றை எல்லாம் மாற்றி ஒரு உருப்படாத 13வது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்தார்.

அவர் பின் வந்த ஆர்.பிரேமதாச அதற்கு ஒரு படி மேலே போய் அரசாங்க அதிபர் மாவட்ட செயலாளர், கிராம சேவகர் ஆகியோரை மாகாண அதிகாரத்தின் கீழிருந்து பிரித்தெடுத்து மத்திய அரசின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வந்தார்.

வலுவற்ற 13வது திருத்தச் சட்டத்தில் கொடுத்த சொற்ப காணி பொலிஸ் அதிகாரங்களைக் கூட இது வரையில் எந்த சிங்கள அரசாங்கமும் தரவில்லை.

சிங்கள அரசாங்கங்கள் கயிறு கொடுப்பதில் மன்னாதி மன்னர்கள். இதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். தங்கள் காரியம் முடியும் வரையில் காலைப் பிடிப்பார்கள். அதன் பின் கழுத்தைப் பிடிப்பார்கள்.

இந்தியாவும் இலங்கைத் தமிழ் மக்களும் ஒருவருக்கொருவர் உதவியாக இல்லா விட்டால் இருவருக்குமே அதோ கதி தான்!

## தோட்டத்...

சம்பள நிர்ணயச் சபையின் இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட நிலையில், 3 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, 1,000 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக வழங்குவதுத் தொடர்பிலான பேச்சுவார்த்தை, சம்பள நிர்ணயச் சபையில் இன்று (8) நடைபெற்றது.

தொழில் ஆணையாளர் தலைமையில், தொழில் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இன்று 2.30 மணியளவில் ஆரம்பமான இப்பேச்சுவார்த்தை, 4.30 மணிவரை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில், தொழிற்சங்கங்கள் சார்பாக எண்மரும் முதலாளிமார் சம்மேளனம் சார்பாக எண்மரும் அரசாங்கத்தின் தரப்பில் மூவரும் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது 900 ரூபாயை அடிப்படைச் சம்பளமாகவும் 100 ரூபாயை பாதீட்டுக் கொடுப்பனவாகவும் வழங்குவதற்கான முன்மொழிவை தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன. இதனை சம்பள நிர்ணயச் சபை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

இதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணங்காமையால் இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பில் தொழிற்சங்கள் சார்பாகக் கலந்துகொண்ட எண்மரும் சம்பள நிர்ணயச் சபையின் மூன்று உறுப்பினர்களும், ஆதரவாக வாக்களித்துள்ளனர். முதலாளிமார் சம்மேளனத்தின் எட்டு உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர்.

இந்நிலையில், 3 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் முதலாளிமார் சம்மேளனமானது 1,000 ரூபாய்க்கு இணங்கவில்லை என்பதுடன் 525 ரூபாயை அடிப்படைச் சம்பளமாகவும் வரவுக்கொடுப்பனவாக 140 ரூபாயும் மேலதிக்கொடுப்பனவாக 50 ரூபாயை வழங்குவதிலேயே விடாப்பிடியாக இருந்துள்ளது.

தமது 525 ரூபாய் முன்மொழிவையும் வாக்கெடுக்குப்பு விடுமாறு நிர்ணயச் சபையை கோரியுள்ளது. இந்த வாக்கெடுப்பில் தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்ளாத நிலையில், வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்துள்ளது.

இந்நிலையில் சம்பள நிர்ணயச் சபையின் இந்தத் தீர்மானம் தொழில் அமைச்சரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கக்கப்படவுள்ள நிலையில் வர்த்தமானியிலும் வெளியிடப்படவுள்ளது.

அதன் பின்னர் சம்பள நிர்ணயச் சபை இந்தத் தீர்மானத்தை மீண்டும் உறுதிபடுத்தப்படவுள்ளது.

மிக நீண்டகாலமாக இழுபறியில் இருந்த தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபாய் சம்பள உயர்வுக்கு, சம்பள நிர்ணயச் சபையினூடாக சுமூகமானத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக, தொழிற்சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வாக்களித்துள்ள அரசாங்கத் தரப்பின் மூன்று உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக, இராஜாங்க அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இப்பிரச்சினைக்கு சுமூகத் தீர்வைப் பெற்றுக்கொடுத்ததற்காக பிரதமருக்கும் நன்றியைத் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 30 வயதுக்கு...

மார்ச் 1 முதல் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி போடப்படும். அதேவேளை, அதற்கு இணையாக 30-60 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார்.

உலக சுகாதார அமைப்பின் கோவாக்ஸ் திட்டத்தின் மூலம் இலங்கைக்கு கோவிட்19 தடுப்பூசிகள் கிடைக்கும். அத்துடன், பிற தடுப்பூசிகளையும் இலங்கை பெற்றுக்கொள்ளும். தடுப்பூசிகளை வாங்குவதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தடுப்பூசி வழங்குமாறு பல்வேறு தரப்பினரிடமிருந்து சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கும் தடுப்பூசி அளவுகளைப் பொறுத்து தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் கோவிட்19 தடுப்பூசிகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா மற்றும் கோவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பயன்படுத்தி சுகாதாரத் துறை, இராணுவம் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட களப்பணியாளர்கள் 160,000 பேருக்கு இதுவரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கு உடல் வலி போன்ற இயல்பான சில பக்கவிளைவுகளே தென்பட்டன. அத்துடன், இந்தத் தடுப்பூசிகள் நல்ல செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அத்துடன், கோவிட் -19 தடுப்பூசி பெற பொதுமக்கள் தயாராக வேண்டும் என்றும் அவர்கேட்டுக்கொண்டார்.

## நெருக்கடிகள்...

பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கு அறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம்.

பௌத்த சாசனத்தை முன்னிலைப்படுத்தி அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுகின்றது. 2015ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ராஜபக்சே பெயருடன் தொடர்புடையவர்களையும் எமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளையும் நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்களுக்குட்படுத்தியது. பௌத்த மத தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பௌத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டிய எதிர்பார்ப்பு அனைத்து தரப்பிலும் காணப்பட்டது. இவ்வாறான நிலையில், 1019ம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## ஐ.நா. மனித...

அமெரிக்கா வெளியேறுவதாக அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். இந்நிலையில் 3 வருடங்களின் பின்னர் பேரவையில் மீண்டும் இணைய அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

கடந்த மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதிலிருந்து அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளில் பைடன் மாற்றங்களைச் செய்துவருகிறார். அவ்வாறான மாற்றங்களில் ஒன்றாக அமெரிக்கா மீண்டும் மனித உரிமைகள் பேரவையில் இணையவுள்ளது.

ஏற்கனவே பாரிஸ் காலநிலை மாற்ற ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவதாகவும், உலக சுகாதார அமைப்புக்கான நிதியுதவியை மீண்டும் வழங்கவுள்ளதாகவும் பைடன் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜெனீவாவை தளமாகக் கொண்ட ஐ.நா. மனித உரமை பேரவையில் மீண்டும் இணையும் அறிவிப்பை அமெரிக்கா வெளியுறவுத்துறை செயலாளர் அண்டனி பிளிங்கன் இன்று திங்களன்று அறிவிப்பார் என்று வெளியுறவுத்துறை மூத்த அதிகாரி ஒருவர் அசோசியேட்டட் பிரஸூக்குத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையை சீர்திருத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் மிகச் சிறந்த வழி அதனுடன் கொள்கை ரீதியாக இணைந்து பயணிப்பதே என்பதால் மீண்டும் பேரவையுடன் இணைந்து செயற்பட உத்தேசித்துள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

இந்த ஆண்டு வாக்களிக்காத உறுப்பினராக பேரவைக்குள் சென்று, 2022-க்குள் முழு உறுப்பினராக இடம்பெற அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 47 உறுப்பினர்களைக் கொண்ட ஜெனீவாவை தளமாகக் கொண்ட ஐ.நா. மனித உரிமைக் பேரவையின் அடுத்த அமர்வு இந்த மாத இறுதியில் தொடங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேரணியில்...

சமூகப் பிரநிதிகள், மதத் தலைவர்கள் என பெருமளவானோருக்கு எதிராக குறித்த மனுக்கள் இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

போராட்டத்திற்கு முன்பாக பொலிஸாரால் குற்றம் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட

புசு அறிக்கையின் அடிப்படையிலான வழக்குகள் மீளப் பெறப்பட்டே புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி வரையில் குறித்த வழக்கினை ஒத்திவைப்பதாக நீதிபதி லெனின்குமார் அறிவித்தார்.



# சுமந்திரனின் பாதுகாப்புப்படை நீக்கம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அதிரடிப் படை மீளப்பெறப்பட்டுள்ளது.

நேற்றிரவு கிடைத்த திடீர் பணிப்பில் சிறப்பு அதிரடிப் படைப் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளதாகவும், காரணம் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறப்பு அதிரடிப் படையினரை வைத்து பேரணியில் பங்கேற்றமை உள்ளிட்ட சில நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கு இவ்வாறு மீளப்பெற்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், பிரமுகர் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு பாதுகாப்புக் கடமையில் இருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் சிலருக்கு கொரோனா

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் பணியாற்றிய ஏனைய ஊழியர்கள் இன்று (திங்கட்கிழமை) கடமைக்குச் சென்ற நிலையில், அவர்கள் தமது அச்சத்தினை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் அதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளாத குறித்த ஆடைத்தொழிற்சாலையின் நிர்வாகம் தொடர்ந்தும் அவர்களை சேவை யாற்றுமாறு வற்புறுத்தியுள்ளனர். இதனால் அங்கு அமைதி இன்மை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பாக அங்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுரைகளை வழங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலையில் குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பலரும் தொழிலுக்காகச் செல்கின்றனர்.

இதனால் மாவட்டத்தின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு தொழிற்சாலை நிர்வாகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை பொது அமைப்புக்களால் முன் வைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு வெளி மாவட்டங்களிலிருந்து உயர் பதவிநிலை ஊழியர்கள் வருகை தருவதால் ஆபத்தான நிலை காணப்படுவதாகவும் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதற்கு அமைவாக சம்மந்தப்பட்டவர்களும் சுகாதார துறையினரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

# கோண்டாவிலில் வீடு புகுந்து கொள்ளையடித்த கும்பலை மடக்கி பிடித்த பொலிஸார்!

நள்ளிரவில் வீடு புகுந்து குடும்பத்தலைவரை வாள் மற்றும் கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டு 6 பவுண் தாலிக்கொடியை கொள்ளையிட்ட கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் செபஸ்தியான் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது

வீடு புகுந்த கும்பல் வாள் மற்றும் கத்தியால் குடும்பத்தலைவரை வெட்டி படுகாயப்படுத்தி விட்டு 6 தங்கப் பவுண் தாலிக்கொடியை கொள்ளையிட்டுத் தப்பித்தது.

கோப்பாய் வைத்தியசாலையில் கடமையாற்றுபவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கொள்ளைக் கும்பலின் வாள் வெட்டுக்கு இலக்காகியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தடயங்களின் அடிப்படையில் கோண்டாவிலைச் சேர்ந்த மூவர் இன்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். 40,30 மற்றும் 23 வயதுடைய சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டனர்.

பிரதான சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், கொள்ளையிடப்பட்ட தாலிக்கொடி, வாள் மற்றும் கத்தி என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் மூவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர் - என்றனர்.

# அரசாங்கத்தின் செயற்பாடு!
## ஐ.நாவில் இலங்கையை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் - எச்சரிக்கும் எதிர்க்கட்சி

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஸ்ரீலங்கா மீது மேலும் அழுத்தம் பிரயோகிக்கக் கூடிய வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஜனாதிபதியால் அண்மையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதுல் கோட்டேயில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் அமைந்துள்ள டி.எஸ்.குணசேகர என்ற நிறுவனத்தின் ஊடாக ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானோரால் செய்யப்பட்டுள்ள மோசடிகள் குறித்த ஆதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன.

இந்த நிறுவனத்திற்கு 3.1 பில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த கடன் தொகை உரிய நேரத்தில் மீள செலுத்தப்படவில்லை.

இதன் மூலம் அரச வங்கிகள் பாரிய நஷ்டமடைந்துள்ள போதிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் இலாப மீட்டிக் கொண்டுள்ளனர்.

அநாவசியமாக விடயங்களுக்கு ஆணைக்குழுக்கள் அமைப்பதை விட இவ்வாறான விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை இலங்கை மீது மேலும் மேலும் அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். ஆணைக் குழுக்கள் ஊடாக மக்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

தெரிந்து கொண்டே மீண்டும் தவறிழைக்கின்றனர். லசந்த விக்கிரமதுங்க , வசீம் தாஜூடீன் உள்ளிட்டோர் கொல்லக்கப்பட்டுள்ள பிரகீத் எக்னலி கொட காணாமலாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் மறக்கப்படா முடியாதவை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் கஞ்சாச் செடி தோட்டம் சுற்றிவளைப்பு

நுவரெலியா மாவட்டத்திலுள்ள நானுஓயா எடின்புரோ தோட்டத்திற்கு மேற்பகுதியில் உள்ள அரசாங்க வனப்பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்ட சேனையொன்றை நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த தேடுதல் நடவடிக்கை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்றதுடன், குறித்த கஞ்சா சேனையில் மூன்று முதல் ஐந்து அடி உயரமான 272 கஞ்சா செடிகள் இருந்ததாகவும், சுற்றிவளைப்பின் போது கஞ்சா செய்கையில் ஈடுபட்டவர் தப்பியோடியுள்ளார் என்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், நுவரெலியா நீதிமன்றத்தில் காண்பிப்பதற்காக மூன்று செடிகளை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய கஞ்சா செடிகளை விசேட அதிரடிப்படையினர் தீயிட்டு அழித்துள்ளனர்.

அத்துடன், இதன் பின்னணியில் உள்ளவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையையும் விசேட அதிரடிப்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் நுவரெலியாவில் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் கைதாகியிருந்தாலும், வனப்பகுதியில் பாரியளவில் கஞ்சா செய்கை செய்யப்பட்ட தோட்டமொன்று சுற்றிவளைக்கப்பட்டமை இதுவே முதல் சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றது.

# 3.9 மில்லியன் முறைகேடு: மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் நிறைவு



இலங்கை சுதந்திர ஊழியர் காங்கிரஸ் எனப்படும் தொழிற்சங்கத்திற்கு சொந்தமான 3.9 மில்லியன் ரூபாயை முறைகேடாக பயன்படுத்தியதாக கூறப்படும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிரான வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்தன.

குறித்த வழக்கு இன்று (திங்கட்கிழமை) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே முன் விசாரணைக்கு வந்தது.

இதன்போது குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் தனது கட்சிக் காரரை விடுவிக்குமாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் சட்டத்தரணி நீதிமன்றில் நீதிமன்றத்தில் கோரியிருந்தார்.

இதனை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கு தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்தார்.

# அரசாங்கத்திற்கு எதிராக களமிறங்க தயாராகும் சுதந்திரக் கட்சி!

நிலவும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார பிரச்சினைகள் காரணமாக பொது மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்சியின் பிரதித் தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாச, கடந்த தேர்தல் காலங்களில் இந்த அரசாங்கம் மீது பொதுமக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தற்போது இல்லாது போய்விட்டதாக கூறினார்.

அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளின் காரணமாக தற்போது விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் வேலைநிறுத்த போராட்டங்களை தொடங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே அரசாங்கம் இவ்வாறு தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளதால் மக்களின் போராட்டத்திற்கு முன்னின்று செயற்படவும் ஆதரவு வழங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக கூறினார்.

மேலும் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டவர்களை தண்டிக்க ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மோசடி மற்றும் ஊழலைத் தடுக்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் கட்சியின் பிரதித் தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாச குறிப்பிட்டார்.